## *Maggi* - தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் இலங்கை நுகர்வோரின் அமோக வாக்குகளுடன் ‘வருடத்தின் மிகச் சிறந்த உணவு வர்த்தகநாமம்’ என்ற அங்கீகாரம்

அண்மையில் இடம்பெற்ற SLIM-Nielsen மக்கள் தெரிவு விருதுகள் 2016 நிகழ்வில் இலங்கை நுகர்வோர் மீண்டும் ஒரு முறை ‘வருடத்தின் மிகச் சிறந்த உணவு வர்த்தகநாமமாக’ தாங்கள் மிகவும் நேசிக்கின்ற, நெஸ்லே நிறுவனத்தின் உணவு வர்த்தகநாமமான *Maggi* இனை தெரிவு செய்துள்ளனர். தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் இம்முறை மக்களின் தெரிவு விருதை *Maggi* வென்றுள்ளமை, இந்த வர்த்தகநாமத்தின் தரம் மற்றும் பாதுகாப்பு மீது இலங்கை நுகர்வோர் கொண்டுள்ள மிக உறுதியான நம்பிக்கையை காண்பிக்கின்றது.

‘‘தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும், எமது நுகர்வோரால் ‘வருடத்தின் மிகச் சிறந்த உணவு வர்த்தகநாமமாக’ நாம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதையிட்டு கௌரவமும், பெருமையும் அடைந்துள்ளோம். *Maggi* இந்த நாட்டில் கடந்த 30 வருடங்களாக இலங்கையில் உள்ள குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள, அவர்களின் விருப்பத்திற்குரிய ஒரு வர்த்தகநாமமாகத் திகழ்ந்து வந்துள்ளது. ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில் அதியுயர் தரத்தை வழங்குவதன் மீது எப்போதும் உறுதியான கவனத்தைச் செலுத்தி வந்துள்ளதுடன், கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக மாற்றமடைந்து வருகின்ற எமது நுகர்வோரின் தேவைகளை புரிந்து, அவற்றை ஈடுசெய்வதை சிறப்பாக முன்னெடுத்து வந்துள்ளது. இது உண்மையில் வெகுமதியளிக்கும் ஒரு அங்கீகாரமாகும்.’’ என்று நெஸ்லே நிறுவனத்தின் உணவுத் துறைக்கான உதவி பிரதி தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ண அவர்கள் குறிப்பிட்டார். ‘‘இன்று *Maggi* இலங்கையில் முன்னிலை வகிக்கும் ஒரு உணவு வர்த்தகநாமமாக திகழ்வதற்கு வழிவகுத்த விசுவாசம் மிக்க எமது நுகர்வோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.’’

பல வகையான உற்பத்திகளைக் கொண்டுள்ள *Maggi*, இலங்கையில் இல்லத்தரசிகளை சமையலறையில் ஆளுமைப்படுத்தும் வல்லமை கொண்ட ஒரு சில வர்த்தகநாமங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. புத்தம்புதிய, உயர் தரம் கொண்ட, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களிலிருந்து தயாரிக்கப்படும் *Maggi* தேங்காய்ப் பால்மா இலங்கையிலுள்ள இல்லங்களின் சமையலறைகளில் தவிர்க்க முடியாத ஒரு துணையாக மாறியுள்ளதுடன், இல்லத்தரசிகளின் முதற் தெரிவாகவும் காணப்படுகின்றது. *Maggi* தேங்காய்ப் பால்மா 1980 களின் பிற்பகுதியில் இலங்கையில் அறிமுகப்படுத்த காலம் முதல் இலங்கையில் சமையல் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தேங்காயை துருவி, அதனைப் பிழிந்து பாலை பிரித்தெடுக்கும் கடினமான பணியை இலகுபடுத்த உதவும் வகையில் நுகர்வோர் கறிகளை ஆக்கும் போது தண்ணீருடன் தேங்காய் பால் மாவைச் சேர்த்து மிக இலகுவாக சமையலை மேற்கொள்ள முடியும். இந்த உற்பத்தி அவர்கள் தமது சமையல் நேரத்தை கணிசமான அளவில் மீதப்படுத்திக் கொள்ள உதவுவது மட்டுமன்றி, புத்தம்புதிய தேங்காய்ப்பாலின் நலம்மிக்க சுவையையும் வழங்குகின்றது.

*Maggi* Rasa Musu சுவையூட்டியானது இலங்கையின் பல்வேறு உணவு தயாரிப்பு வகைகளில் சுவையை மேம்படுத்துவதற்கு உபயோகிக்கப்படுகின்றது. அன்றாடம் நாம் தயாரிக்கின்ற கறி வகைகள் மற்றும் சம்பல் வகைகளுக்கு சுவையையும், நலனையும் சேர்ப்பிப்பதற்கு வெங்காயம், வெள்ளைப் பூண்டு மற்றும் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு மசாலா வகைகள் போன்ற அசல் சேர்க்கைப் பொருட்களின் சுவையைத் தருகின்றது.

உணவின் இயற்கை நலனை விரும்புகின்ற நவீன நுகர்வோரின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதுடன், தனது தாய்நிறுவனமான நெஸ்லேயின் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்ற அர்ப்பணிப்பையும் பகிர்ந்து கொண்டுள்ள *Maggi*, தனது உற்பத்தி வகையில் தொடர்ச்சியாக ஊட்டச்சத்து உள்ளடக்கங்களை மேம்படுத்தி வந்துள்ளது. *Maggi* Classic noodles வகைகளான *Maggi* Chicken மற்றும் *Maggi* Curry ஆகியன கல்சியம் மற்றும் விட்டமின் ஏ செழுமை நிரம்பியவை. *Maggi* Rasa Musu ஆனது இரும்புச்சத்தின் செழுமை நிரம்பியது. உணவில் உள்ளெடுப்பதற்குத் தேவையான அளவு என பரிந்துரை செய்யப்பட்ட நுண் ஊட்டச்சத்துக்களின் 1/3 பங்கினை நுகர்வோருக்கு வழங்குகின்றன. மரக்கறி வகைகள் மற்றும் மசாலா வகைகள் போன்ற அசல் சேர்க்கைப் பொருட்களின் சுவையையும், நலச்செழுமையையும் வழங்கும் ஒரு முயற்சியாக *Maggi* Chicken மற்றும் *Maggi* Curry noodles

ஆகியன அண்மையில் ஊட்டச்சத்து சீரமைப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மஞ்சள், ஜாதிக்காய், கொத்தமல்லி, சீரகம் மற்றும் ஏலக்காய் போன்ற இலங்கையிலுள்ள இல்லங்களில் பொதுவாக உபயோகிக்கப்படுகின்ற பிரபலமான ‘வீட்டு சமையல் சேர்வைப் பொருட்களை’ உள்ளடக்கி *Maggi* Chicken மற்றும் *Maggi* Curry noodles ஆகியனவற்றின் சுவை வடிவங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், ‘‘எமது உற்பத்தியின் தரம் மற்றும் எமது நுகர்வோரின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவற்றை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் எமது பலம் ஆகியவற்றிற்கு இந்த வெற்றி சான்று பகருகின்றது. இலங்கை மக்கள் *Maggi* மீது வைத்துள்ள தொடர்ச்சியான நம்பிக்கையின் வெளிப்பாடாக இது அமைந்துள்ளது.’’

SLIM - Nielsen மக்கள் தெரிவு விருதுகள் நிகழ்வானது இலங்கையில் இடம்பெறுகின்ற முன்னணி சந்தைப்படுத்தல் விருதுகள் நிகழ்வாகத் திகழ்ந்து வருகின்றது. இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையம் (SLIM) மற்றும் இலங்கையிலுள்ள ஆராய்ச்சி நிறுவனமான Nielsen ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்கின்ற இவ்விருதுகள் நிகழ்வு ஒவ்வொரு இலங்கை மக்களின் உள்ளங்களையும், எண்ணங்களையும் ஈர்த்துள்ள வர்த்தகநாமங்கள் மற்றும் தனிநபர்களை இனங்கண்டு, அங்கீகாரம் வழங்குவதற்கான மிகச் சிறந்த ஒரு தளமேடை என பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.